1978 ஆகஸ்ட் 31]

காது கேளாதவர்களுக்குக் கேட்புதவிக் கருவிகள்.

வினா 200—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1975–76-ல் காது கேட்காதவர்களுக்குக் கேட்புதவிக் (Hearing aid) கருவி எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) 1977–78-ல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

விடை—(அ) 1975–76-ல் 447 பள்ளி செல்லும் காது கேளாத சிறுவர்களுக்குக் கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப் பட்டன.

(ஆ) 1977–78-ல் 176 பள்ளி செல்லும் காது கேளாத சிறுவர்களுக்குக் கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(5) உரிமைப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோரல்.

திரு. து. புருஷோத்தமன்: உரிமைப் பிரச்னை எழுப்ப விரும்பு கிறேன். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கின்றபோது, உண்மைக்கு மாறாக, தவறான....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதில் உரிமைப் பிரச்னை இருக்குமானால், எழுத்து மூலமாகத் தாருங்கள். உரிமைப் பிரச்னை என்று சொல்லிவிட்டு, பேசக் கூடாது.

(6) அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 6(1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர் களாக (Pannel of Chairmen) நான் நியமிக்கின்றேன்.

1. திரு. பி. எச். பாண்டியன்,
2. திரு. சு. முத்துசாமி,
3. திரு. எம். செல்வராஜ்,
4. திரு. துரை முத்துசாமி,
5. திரு. ரா. மார்க்கப்பந்து.